## சவ்ஹவுசன் நகர பள்ளிகளில் நகரத்திற்குச் சொந்தமான தகவல் தொழில்நுட்ப வளங்களைப் பயன்படுத்த பள்ளி மாணவர்களுக்கான பயன்பாட்டு விதிமுறைகள்

அனைத்து 4.-6. ஆரம்ப பள்ளி வகுப்புகள் அதேபோல் 1.-3. மேல் தர வகுப்புகளை சேர்ந்த மாணவர்களுக்கும் தனிப்பட்ட ஒரு கடன் சாதனம் வழங்கப்படும்.
கடன்சாதனம் மற்றும் வழங்கப்பட்ட பாகங்கள் பள்ளிக்காலம் முழுவதும் சவ்ஹவுசன் நகரத்தின் வசம் இருக்கும் மற்றும் பள்ளியை விட்டு வெளியேறுகையில் செயற்படும் நிலையில் திரும்ப வழங்கப்பட வேண்டும்.
கடன்சாதனங்களின் விவேகமான மற்றும் கவனமான கையாள்கையை நாங்கள் நம்புகிறோம், மற்றும் இந்த சாதனங்களை கையாள்வதில் மிக முக்கியமான விடயங்களை பயன்பாட்டு விதிமுறைகளில் பட்டியலிட்டுள்ளோம்:

**மாணவர்களின் உரிமைகள் மற்றும் கடமைகள்: மாணவர்கள் ...**

- கடன்சாதனத்தை வகுப்பில் ஆசிரியர்களின் அறிவுறுத்தல்களின்படி வேலைக்காக பயன்படுத்துகிறார்கள்.
- பொருந்தக்கூடிய சட்டங்களை (குறிப்பாக குற்றவியல் சட்டம்,தனியுரிமை-,தகவல்-மற்றும் பதிப்புரிமை சட்டம்)கடைப்பிடிக்க கடைமைப்பட்டுள்ளனர்.
- கடன்சாதனத்தை பெற்றோர்/பாதுகாவலரின் அனுமதியோடு தனிப்பட்ட முறையிலும் பயன்படுத்தலாம்.
- கடன்சாதனம் மற்றும் பாகங்களை சரியாகவும் கவனமாகவும் கையாளவும் மற்றும் தொலைந்து போகாமல் கவனமாக இருக்கவும் கடமைப்பட்டுள்ளனர்.
- கடன்சாதனத்தை சார்ஜ் ஏற்றி பள்ளிக்கு கொண்டு வருகிறார்கள் அல்லதுஅது வீட்டில் தேவையில்லையென்றால் பள்ளி நாள் முடிவில் பள்ளியில் பாதுகாப்பாக வைக்கின்றார்கள்.
- பாடத்தின்போது கடன்சாதனத்தை எந்த நேரத்திலும் பயன்படுத்தலாம் என்பதை உறுதிப்படுத்துகிறார்கள்.
- பள்ளியால் நிறுவப்பட்ட அல்லது வழங்கப்பட்ட மென்பொருளுடன் வேலைசெய்ய கடமைப்பட்டுள்ளனர்.பிற மென்பொருள் நிறுவப்படாமல் இருக்க வேண்டும்.
- கடன்சாதனத்தை பள்ளிவளாகத்தில் பள்ளிப்பணிகளுக்கு மட்டுமே பயன்படுத்துகிறார்கள் மற்றும் அந்தந்த பள்ளிவிதிகளை கடைப்பிடிக்கிறார்கள்.
- கடன்சாதனத்தை கூடுதலாக எழுதவோ குறிக்கவோமற்றும் இருக்கும் லேபல்களை அகற்றவோ இல்லை. ஒரு லேபல் விழுந்தால் உடனடியாக அவர்கள் அதை ஆசிரியர்களிடம் அறிவிக்கிறார்கள்.
- கடன்சாதனத்தை அதேபோல் கடவுச்சொல்லை அடுத்தவரிடம் கொடுக்கமாட்டார்கள்.
- இனவெறி,வன்முறையை ஆதரித்தல் மற்றும் ஆபாச உள்ளடக்கங்கங்களை கடன்சாதனத்துடன் அணுகவோ,சேமிக்கவோ அல்லது அனுப்பவோ கூடாது என்பதை அறிந்திருக்கிறார்கள்.
- மற்றவர்களின் பதிவுகளை(படம்,ஒலி,காணொளி)அவர்களின் அனுமதியோடு மட்டுமே உருவாக்குகிறார்கள் மற்றும் பரப்புகிறார்கள்.
- பாடத்தின்போது ஆசிரியரின் பணிப்பின் பெயரில் பதிவுகளை செய்கிறார்கள்.
- ஆசிரியரால் அனுமதிக்கப்பட்டிருந்தால் மட்டுமே சமூக வலையமைப்புகளை அணுகுகிறார்கள்.
- ஆசிரியர்களுக்கும் பாதுகாவலர்களுக்கும் எந்த நேரத்திலும் தங்கள் தரவை அணுகுவதை சாத்தியமாக்கவும் கடன்சாதனத்தில் சேமிக்கப்பட்டிருப்பதை காட்டவும்கடமைப்பட்டுள்ளார்கள்.
- வீட்டில் பெற்றோர் தீர்மானிக்கும் பயன்பாட்டுவிதிமுறைகளை மதிக்கின்றார்கள்.
- கடன்சாதனத்தை பாதுகாப்பாக இருக்கக்கூடிய பொருத்தமான பையில்( உ.ம். Schulthek, Rucksack) ( பள்ளிப்பை,) கொண்டுசெல்கிறார்கள்.
- கடன்சாதனத்தை பள்ளி செல்லும் வழியில் பையில் வைக்கிறார்கள்.விதிவிலக்குகளை ஆசிரியர் வரையறுக்கிறார்.
- கடன்சாதனம் சேதமடைந்தாலோ அல்லது திருடப்பட்டாலோ உடனடியாக ஆசிரியருக்கு அறிவிக்கிறார்கள்.
- தங்கள் தரவுகளை எப்போதும் காப்புப்பிரதி எடுக்கிறார்கள்.சாதனத்தில் சேமிக்கப்பட்டிருக்கும் தரவுகள்மட்டுமே பழுதுபார்த்தல்,பரிமாற்றல் அல்லது திரும்ப கொடுத்தலின்போதுநீக்கப்படும்.

**நகரம் மற்றும் பள்ளியின் பங்கு: சவ்ஹவுசன் நகரம்...**

- கடன்சாதனங்களிற்கு நிதியளிக்கிறது மற்றும் மென்பொருள் மற்றும் தகவல்கள் உள்ளிட்ட அனத்து சாதனங்களிற்கும் சொந்தமாக உள்ளது.
- பள்ளியின் சொந்த சாதனங்களின் ஆதரவை உறுதிசெய்கிறது மற்றும் உத்தரவாதம்-மற்றும் பழுதுபார்த்தலுக்கு பொறுப்பாகவுள்ளது.தனிப்பட்ட சாதனங்களிற்கு இது ஆதரவளிக்காது.
- கடன்சாதனங்கள் பள்ளி வலையமைப்பிற்கு வெளியே ஒரு உள்ளடக்க வடிப்பானால்[1] (Content Filter) பாதுகாக்கப்பட்டிருப்பதையும் ஒரு வைரஸ் எதிர்ப்பு பாதுகாப்பு நிறுவப்பட்டிருப்பதையும் உறுதிசெய்கிறது.

[1] உள்ளடக்க வடிப்பான்கள் ஒரு நிரலுடன் வலைத்தளங்கள் அல்லது மின்னஞ்சல்களைச் சரிபார்க்க இணையத்தில் பயன்படுத்தப்படுகின்றன, தேவைப்பட்டால், அனுமதிக்க முடியாதவை அல்லது ஆட்சேபிக்கத்தக்கவை என வகைப்படுத்தப்பட்ட உள்ளடக்கங்களை அணுகுவதை தடுக்கிறது.

ளை கடைப்பிடிக்காமை
பும் ஏற்காது.



STADT SCHAFFHAUSEN

- பல்வேறு கற்றல் சூழல்களை பயன்படுத்துகிறது(டிஜிட்டல் கற்றல் உதவி, Microsoft Office365,கற்றல் தளங்கள்) மற்றும் கற்றல் சூழல்களுக்கு தரவுப்பாதுகாப்புவிதிமுறைகள் கடைப்பிடிக்கப்படுவதை உறுதிசெய்கிறது.
- கடன்சாதனத்தின் பயன்பாட்டினை மட்டுப்படுத்துவதை தன்னிடம் வைத்துள்ளது.
- துஷ்பிரயோகம் குறித்த நியாயமான சந்தேகம் இருந்தால் தனிப்பட்ட பதிவுத்தரவுகளின் ஒரு மதிப்பீட்டை செய்யும் உரிமையை கொண்டுள்ளது.அத்தகைய ஒரு மதிப்பீடு பள்ளிஅதிகாரி அல்லது மேலதிகாரி மூலமே உத்தரவிடப்பட முடியும்.

**ஆசிரியர்களின் பங்கு: ஆசிரியர்கள் ...**

- வகுப்பறையில் சாதனங்களை பயன்படுத்துவது பற்றி வரையறுக்கிறார்கள்,மற்றும் தொழில்நுட்பங்கள் மற்றும் சாதனங்களை பயன்படுத்துவது பற்றி மாணவர்களுக்கு பயிற்சியளிக்கிறார்கள்.
- கடன்சாதனத்தின் உள்ளடக்கத்தை எந்தநேரத்திலும் சரிபார்க்கும் உரிமையைகொண்டுள்ளனர்.

**பெற்றோர் /சட்டபூர்வ பாதுகாவலர்களின் பங்கு: பெற்றோர் / சட்டபூர்வ பாதுகாவலர்கள்...**

- தங்கள் பிள்ளை கடன்சாதனத்தை வீட்டில் பயன்படுத்தலாமா மற்றும் எவ்வாறு என்பதை தீர்மானிக்கிறார்கள்.உதவிக்குறிப்புகளை, உ+ம். www.projuventute.ch (ஊடகங்கள் & இணையம்) அல்லது www.jugendundmedien.ch. இல் காணலாம்.
- நேரம் மற்றும் உள்ளடக்க பயன்பாடு தொடர்பாக வீட்டில் சாதகமான விதிகளை உருவாக்குகிறார்கள்.
- முழு உள்ளடக்கத்தை காணவும் தேவைப்பட்டால் பிள்ளை மூலம் நீக்கவும் எந்த நேரத்திலும் உரிமையுள்ளவர்கள்.
- வீட்டில் சாதனத்தின் பொருத்தமான பயன்பாட்டிற்கான பொறுப்பை ஏற்கிறார்கள்.
- தனிப்பட்ட பகுதியில் பிள்ளைகள் மற்றும் அவர்களின் கடன்சாதனத்தின் பயன்பாட்டிற்கு பொறுப்பானவர்கள்.
- சேதம் அல்லது இழப்பு ஏற்பட்ட 48 மணி நேரத்திற்குள் வகுப்பாசிரியருக்கு அறிவிக்கிறார்கள்,சேதம் மற்றும் இழப்பின் வகை மற்றும் காரணம் பற்றிய தகவல்களோடு திருட்டின் போது காவல்துறை அறிக்கையையும் இணைக்கிறார்கள்.

**பொறுப்பு**

- தகவல்தொழில்நுட்ப-உள்கட்டமைப்பிற்கு வேண்டுமென்றே சேதம் ஏற்படுத்துவதற்கு சட்டபூர்வ பாதுகாவலரே பொறுப்பேற்கிறார்கள்.
- தனியார் பாகங்கள் பொதுவாக கடன்சாதனத்துடன் இணைக்கப்படலாம்.ஆனால் இது கடன்சாதனத்தின் உற்பத்தியாளரால் இணங்கப்பட்டதாக இருக்க வேண்டும்.பள்ளியால் ஒப்படைக்கப்படாத பாகங்கள் தொடர்பான சேதங்களிற்கு சட்டபூர்வ பாதுகாவலர்களே பொறுப்பேற்கிறார்கள்.
- சவ்ஹவுசன் நகரம் கடன்சாதனத்துடன் ஏற்படக்கூடிய சேதங்களிற்கு பொறுப்பாகாது.இது பள்ளியால் வழங்கப்பட்ட,தனியார் சாதனங்களில் நிறுவப்படக்கூடிய மென்பொருளுக்கும் பொருந்தும் (உ+ம். Microsoft Office365).
- பள்ளியைவிட்டு வெளியேறும்போது கடன்சாதனம் (வழங்கப்பட்ட பாகங்களுடன்) சாதாரணமான பயன்பாட்டை கருத்தில் கொண்டு பெற்றுக்கொண்ட அதேநிலையில் திரும்ப வழங்கப்பட வேண்டும். .பாகங்கள் காணாமல் அல்லது சேதமடைந்திருந்தால் சட்டபூர்வ பாதுகாவலர்களே சேதத்திற்குரிய கட்டணத்தை பொறுப்பேற்கிறார்கள்.

---

எங்கள் கையொப்பத்துடன் பயன்பாட்டுவிதிமுறைகளை நாங்கள் ஒப்புக்கொள்கிறோம் என்பதை நாங்கள் உறுதிப்படுத்துகிறோம்.

| | |
|---|---|
| ……………………………………………… | ……………………………………………… |
| பிள்ளையின் முதற்பெயர் மற்றும் பெயர் | இடம்,திகதி மற்றும் பிள்ளையின் கையொப்பம் |
| ……………………………………………… | ……………………………………………… |
| பெற்றோர்/சட்டபூர்வ பாதுகாவலரின் முதற்பெயர் மற்றும் பெயர் | இடம்,திகதி மற்றும் பெற்றோர்/சட்டபூர்வ பாதுகாவலரின் கையொப்பம் |


STADT SCHAFFHAUSEN